**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.64/2025** |
| Deposition of witness | : | P.W.7 |
| Name | : | Dr.பிரபா |
| Father's /Husband Name | : | ரெங்கசாமி |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 43 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 26th day of August 2025.
Both Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.02.2025 ம் தேதி மாலை 06.27 மணியளவில் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியிலிருந்த போது திருக்கண்ணபுரம் புளியங்குடியை சேர்ந்த பிரபாகரன் என்பவரது மனைவி 24 வயது மதிக்கத்தக்க சௌமியா என்பவரை அவரது தாயார் சுமித்ரா என்பவர் மூலம் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவரை நான் விசாரித்த போது அன்றைய தினம் மாலை 05.00 மணியளவில் எட்டியலூரில் அவரது தாயார் வீட்டிலிருந்த போது தெரிந்த 2 நபர்கள் கழுத்தை கையால் நெறித்தும் கையால் உடம்பு முழுவதும் குத்தியதாகவும் கூறினார். மேலும் அவர் மூன்று மாதங்களாக மாதவிடாய் இல்லாமல் இருந்ததாகவும் கூறினார். அவரை நான் பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. கழுத்து முழுவதும் வலி இருப்பதாக கூறினார். வலது பக்க மார்பின் மேற்புறமும் கீழ்புறமும் தொடு வலி இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விபத்து பதிவேட்டில் பதிவு செய்து உள்நோயாளியாக அனுமதித்தேன். **மேற்படி நபருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகியறது.** மேற்படி நபர் கூறிய வகையில் அவருக்கு

காயம் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு என்று சொன்னால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

இந்த வழக்கில் புகார்தாரர் அ.சா.1 வீட்டு படிக்கட்டில் நிலைதடுமாறி கீழே விழுந்தாலும் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் படிக்கட்டிலிருந்து நிலைதடுமாறி கீழே விழுந்தால் ஏதாவது வீக்க காயம் ஏற்படக்கூடும் ஆனால் அ.சா.1க்கு அப்படி வீக்ககாயம் ஏதும் இல்லை. பொதுவாக உடம்பில் உள்காயம் ஏற்பட்டால் வலி இருப்பதாக பொய்யாக சொல்லலாம் என்றால் சரிதான். ஆனால் அ.சா.1ன் மார்பகத்தில் தொடும்போது தொடுவலி இருந்ததை காண முடிந்தது. மார்பகத்தில் ஏற்பட்ட காயமானது நிலைதடுமாறி கீழே விழும் போது ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.26 13:42:03 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.